REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 11உ திங்கள் (24—1—55) ★ ★ வெளியூர்: தை 12உ செவ்வாய் (25—1—55) [இதழ் 190

இந்தி வெறியரின் ஆங்கில பக்தி

தமிழில் பேசவிடவில்லை

ஆவடி காங்கிரசில் விவசாய நிலை பற்றிய தீர்மானத்தை ஆதரித்து நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தமிழில் பேசினாராம். தமிழ் மொழி அறியாத வடநாட்டு இந்தி வெறியர்கள் 'ஆங்கிலத்தில் பேசுங்கள்' என்று கோஷமிட்டார்களாம். அமைச்சர் தொடர்ந்து தமிழில் பேசும்போது ஆங்கிலம் வேண்டியோரின் குரலும் வலுத்ததாம். இதுகண்ட அமைச்சர் சுப்பிரமணியம், சிறிது நேரம்தான் தமிழில் பேசுவதாகவும், பின்னர் ஆங்கிலத்தில் பேசுவதாக கூறியபின் வடநாட்டாரின் கூச்சல் அடங்கியதாம்.

ஜாதி வெறியை எதிர்த்துக் கிளர்ச்சி

—(:)—

தாழ்த்தப்பட்டோர் துணி அணிய ஜாதி இந்துக்களின் தடை

களை எடுப்பு!

★

"நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, காங்கிரஸ் கட்சியில் பல சுயநலவாதிகளும் பச்சோந்திகளும் புகுந்து கொண்டார்கள் என்பதை எவருமே மறுக்க முடியாது. சட்ட சபை பிரவேசத்தைத் தொடர்ந்து பதவி வேட்டைகளும் மலிந்தன; அதனால் கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்களும், ஆதிக்கப் போட்டிகளும் அதிகரித்து ஸ்தாபனத்தின் ஐக்கியம் பாதிக்கப்பட்டது. சிற்சில ராஜ்யங்களில் காங்கிரசின் செல்வாக்கு அடியோடு பாதிக்கப்படும் அளவுக்கு அபாயம் முற்றியிருந்தது; காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே போட்டி பொறாமைகள் காரணமாக எதிர்க்கட்சியினரை ஆதரித்தவர்களும், வகுப்புவாதத்தைத் தூண்டிவிட்டவர்களும் இல்லாமல் இல்லை. இவ்வாறு கட்சியின் லட்சியங்களை மீறி நடப்பவர்களும், கட்டுப்பாட்டுக்கு உட்படாதவர்களும் இருக்கும் வரை காங்கிரஸ் ஸ்தாபனம் எவ்வாறு ஒற்றுமையுடன் செயலாற்ற முடியும்? ஆகையால் முதலில் அத்தகையவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம்."

—'நவ இந்தியா': 21-1-55

அழைக்கப்படுகிறார்கள்

சோவியத் ரஷ்யாவின் தூதுவர்களாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளிலிருப்போரையும், ஆலோசனைக்காக, மாஸ்கோ வருமாறு ரஷ்யா அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

சிறுத்தாமூர் கோவிலில் நுழையக்கூடாதாம்!

திண்ணலூர் அரிசன முன்னேற்றக் கழகம் தீண்டாமையை எதிர்த்துப் போராடும்

சென்னை, ஜன. 24—

பார்ப்பனர்கள் வாழும் தெருக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடந்து செல்லக்கூடாது என செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகாவிலுள்ள சிறுத்தாமூர் கிராமத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்களாம்.

உயர்ஜாதி இந்துக்கள் எனப்படுவோர் வாழும் தெருக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களாம்; ஆனால், அத்தெருக்களில் செல்லும்போது, வேஷ்டி கட்டிக்கொண்டு செல்வது கூடாதாம்; கோவணத்துடன்தான் நடந்து செல்ல வேண்டுமென சிறுத்தாமூர் கிராமத்தின் 'உயர்ஜாதி' இந்துக்கள் உத்திரவிட்டிருக்கிறார்களாம்.

சென்னை மாநிலத்தில் உள்ள ஆலயங்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்பட்டிருக்கும்போது, சிறுத்தாமூர் சேரியில் வாழும் தாழ்த்தப்பட்ட இனத்தவர், அவ்வூரிலுள்ள ஆலயத்திற்குள் செல்லக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறார்களாம்.

காந்தியாரின் பெருமையைப் போற்றி வாழும் நாட்டில், இதுபோன்ற கொடுமைகள் கூடாது என்றும், உடனே தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், திண்ணலூர் அரிசன முன்னேற்றக் கழகத் தலைவர் செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறாராம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் சேரி, கிராமத்திற்கருகே உள்ளதென்றும், ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் குடிசைகளைப் பிரித்துக்கொண்டு வெகு தூரத்திற்கு அப்பால் சென்றுவிட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்களென்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கே குடி தண்ணீர் வசதி இல்லையென்றும், குட்டை ஒன்றில் உள்ள நீரைக் குடிப்பதால் அவர்கள் பல நோய்களுக்கு இரையாகின்றனர் என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறதாம்.

தாழ்த்தப்பட்ட மக்களை அடிமைகளாக வைத்திருக்க பார்ப்பனர்களும், உயர்ஜாதியினரும் விரும்பினால், அது பயன்தராத விருப்பம் என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படும் இக்கொடுமைகளைப் போக்க தக்க நடவடிக்கைகள் எடுக்காவிடில் கிளர்ச்சி செய்ய நேரிடுமென்றும், தீண்டாமையை வளர்த்துவரும் இப்போக்கினை எதிர்த்து, சேரி மக்கள், பார்ப்பனர்கள் வாழும் தெருக்கள் வழியாக அழைத்துச் செல்லப்படுவர் என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறதாம்.

பண்டிதர் பதறுகிறார்!

"தவறென்று தெரிந்தும்கூட நம்மிலே பலர், மாகாண. சாதி வெறி கொண்டவர்களாகிவிடுகிறார்கள்; இதை எதிர்த்து நாம் முறியடிக்க வேண்டும். அடிப்படையிலேயே கெட்டதாக அமைந்துள்ள ஒன்றிடம் நாம் சமரசம் செய்துகொள்ள முடியாது. முதலில் அடிப்படையாக, இந்தியா ஒன்றாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றுதான் எண்ண வேண்டுமென்பதை நாம் உணர வேண்டும்; இந்த 'ஒன்று' என்ற எண்ணத்தைப் பாழ்படுத்தும் எந்தக் கருத்தையும் நடவடிக்கையையும் நாம் புறக்கணிக்க வேண்டும்."

"வெகு தூரத்திலிருக்கும் தென்னாட்டிற்கு வருகிற வடவர்களாகிய நாங்கள், இந்தியாவின் ஒற்றுமையை உணர்கிறோம்; நாங்கள் அதைக் காண்பதைக் காட்டிலும் அதிகமாக உணர்கிறோம்; இங்குதான், வடநாட்டைக் காட்டிலும் உறுதியான வகையில் இந்தியக் கலாச்சாரம் நிலைபெற்றுள்ளது; சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்தியாவில் வேறெந்தப் பகுதியினரைக் காட்டிலும் சென்னை வாசிகள்தான் அதிகமாக 'இந்தியர்'களாகக் காட்சி தருகிறார்கள்."

இவ்வாறு பண்டித நேரு ஆவடி மாநாட்டில் இறுதி உரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனவரி ஒப்பந்தம் பலனளிக்கவில்லை

இலங்கை இந்தியர் துயரம்: நேருவிடம் தூது

சத்தியமூர்த்தி நகர், ஜன. 23—

இலங்கை சர்க்கார் இந்தியர்களின் குடிஉரிமை மனுக்களை நிராகரிப்பது பற்றி இந்தியப் பிரதமர் பண்டித நேருவிடம் இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் எடுத்துக் கூறினாராம்.

இலங்கை இந்தியர் பற்றிய எல்லா நிலைமைகளையும் விளக்கி தொண்டமான், நேருவிடம் ஒரு மகஜர் கொடுத்துள்ளாராம்.

சாதாரண காரணங்களுக்காகக் குடிஉரிமை மனுக்களை நிராகரிப்பது தொடர்ந்து நீடிக்கிறதாம்.

ஜனவரியில் புதிய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் குடிஉரிமை மனுக்கள் நிராகரிக்கப்படுவது ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பிருந்ததை விட அதிகம் என்று சொல்லப்படுகிறது.

, 1953 ஆகஸ்டு முதல், டிசம்பர் வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு 1,399 மனுக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதாம்.

சென்ற ஜனவரி முதல் 9 மாதங்களுக்கு, 1,983 மனுக்கள்தான் அனுமதிக்கப்பட்டதாம்.

ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை 1,796 மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாம்.

சென்ற ஆண்டில், முதல் 8-மாதத்தில் 43,440 மனுக்கள் நிராகரிக்கப்பட்டனவாம்.

சென்ற இரண்டு மாதங்களில், 18,202 மக்கள் சம்பந்தப்பட்ட 5,892 மனுக்கள் நிராகரிக்கப்பட்டனவாம்.

16 பேர்களின் குடிஉரிமை பற்றிய ஒரே ஒரு மனுதான் அனுமதிக்கப்பட்டதாம்.

[ஆவடியில் கூடிய காங்கிரஸ் மாநாடு இலங்கை இந்தியர் பற்றி எவ்வித தீர்மானமும் நிறைவேற்றவில்லை.]

'இந்தி அறியாதவர்கள் சட்டசபை உறுப்பினராக தகுதியற்றவர்களாம்'

பம்பாய் பிரதமரின் கூற்று

சென்னை, ஜன. 24—

"ஒருவருக்கு இந்தி மொழி தெரியாதென்றால் அவர் எந்த சட்ட சபைக்கும் செல்வதற்கு தகுதி பெற்றவர் அல்ல" என்று, பம்பாய் பிரதமர் மொரார்ஜி தேசாய் ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் சட்ட சபையாளரின் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தி தேசிய மொழியாக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, அந்த மொழியை ஒருவர் கற்றுக்கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்கது" என்றும் கூறினாராம் அவர்.

அப்போது தென்னாட்டு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் ஒருவர், "இந்தி மொழியைக் கற்பது மிகவும் கடினமாக இருக்கிறது" என்று பரிதாபக் குரலில் கூறினாராம்.

அதற்கு பதில் அளிக்கும் வகையில் அவர், "இந்தி கற்கவேண்டுமென்று முனைந்தால் அவர்களுக்குக் கஷ்டமிருக்காது" என்று கூறிவிட்டு, தனது தாய்மொழி இந்தி அல்லவென்றும், அதனால், தான் இந்தியைக் கற்றுக்கொண்டதாகவும் கூறினாராம்!

காங்கிரஸ் பிறந்தது மைலாப்பூரிலாம்!

புதிய சரித்திரம் உருவாக்க முயற்சியா?

★

இந்திய தேசியக் காங்கிரஸ் நிறுவனத்தின் உதயம் பற்றி, இதுவரை சரித்திர பூர்வமான உண்மைக்கு மாறாக, தற்போது புதியதொரு கதை வெளிவந்திருக்கிறது.

சரித்திர ஆதாரபூர்வமாக, 70-ஆண்டுகளுக்கு முன், 1885-ம் ஆண்டு மார்ச்சு திங்களில், ஓய்வு பெற்ற வெள்ளைக்கார ஐ. சி. எஸ். அதிகாரியான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் அகில இந்திய காங்கிரஸ் நிறுவனத்தை உருவாக்கினார் என்பது உண்மை. ஆனால், சென்னை மைலாப்பூரில்தான் 1884-ம் ஆண்டில் காங்கிரஸ் நிறுவனம் தோற்றுவிக்கப்படுவதற்கு வித்திடப்பட்டதாக ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அந்த ஆண்டில் சென்னை மைலாப்பூரில் சில காங்கிரஸ் பிரமுகர்கள் கூடி காங்கிரசை நிறுவுவது பற்றி ஆலோசித்த இடமென்று ஒரு வீட்டின் படத்தையும் ஒரு பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. படத்திலுள்ள வீட்டின் முன்முகப்பில் "இந்தியன் தேசியக் காங்கிரஸ் - டிசம்பர் 1884-ல் இங்கு நிறுவப்பட்டது" என்று எழுதப்பட்ட ஒரு அறிவிப்புப் பலகையும் வைக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது.

வேண்டுகோள் பலனளிக்கிறது

நைரோபி, ஜன. 20—

தென் ஆப்பிரிக்காவில் உள்ள கென்யாவிலிருக்கும் மாவ் மாவ் இயக்கத்தவர், நிபந்தனையின்றி சரணடைந்துவிடவேண்டுமென்று அண்மையில், வெள்ளையராட்சி அறிக்கை ஒன்று தந்திருந்ததற்கொப்ப, அந்த அறிக்கை பிரசுரம் ஒன்றை, கையிலெடுத்துக்கொண்டு இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர், தான் முன்பு பணியாற்றிவந்த ஒரு குடியானவரிடம் சரண்புகுந்ததாகத் தெரிகிறது.

இவர்தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கிய முதல் 'மாவ் மாவ்' இயக்கத்தவர் எனக் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 24—1—1955 திங்கள்

சர்வாதிகார நடவடிக்கை

சென்னை மாநிலத்தில் உள்ள சில முக்கியமான ஆலயங்களின் நிர்வாகத்தை 'புராதனச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்ட'த்தின் கீழ் இந்தியப் பேரரசு நேரடியாக மேற்கொள்வதற்கான திட்டங்கள் தீட்டி வருவதாகச் செய்தி வந்துள்ளது.

சிதம்பரம் நடராசரும், மதுரை மீனாட்சியும், இராமேஸ்வரம் இராமநாதரும், சீரங்கம் அரங்கனாதப் பெருமாளும், சீவில்லிப்புத்தூர் ஆண்டாள் அம்மையும் இனி டெல்லி தேவதையின் ஆணைக்கொப்பவே 'அருள் புரி'வார்களாம்!

ஆந்திராவில் உள்ள திருப்பதி வெங்கடேசுவரப் பெருமானுக்கும் அதே கதிதானாம்!

மருந்துகளையும், மருந்து தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களையும் உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரத்தை மாநில அரசாங்கங்களிடமிருந்து மத்திய அரசாங்கம் சிக்கிரமே தன் வசப்படுத்திக் கொள்ளும் என்று ராஜ்கோட்டிலிருந்து வந்துள்ள செய்தி ஒன்று கூறுகிறது.

உணவுப் பொருள்கள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விநியோக விலைக்கட்டுப்பாடு போன்றவற்றை நிர்ணயிக்கிற அதிகாரத்தை மாநில அரசாங்கத்திடமிருந்து மத்திய அரசாங்கம் மேற்கொள்ளுவது என்பதற்கான திருத்த மசோதா ஒன்று மக்கள் சபையில் வரப்போகிறதென செய்தி ஒன்று கடந்த டிசம்பர் மாதத்தில் வெளி வந்தது.

இப்படி மாநில அரசாங்கங்களிடம் இருக்கும் சுயாட்சிக்கான சிறிய சிறிய அதிகாரங்களை எல்லாம் ஒவ்வொன்றாக மத்திய அரசாங்கம் தட்டிப் பறித்துக்கொண்டு வருவதை நாம் காண்கிறோம்.

உணவுப் பொருள்கள் பற்றிய அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் தந்துவிடுவது என்ற தீர்மானம் சென்னை மேல்சபையில் விவாதத்திற்கு வந்தபோது, கட்சிப் பாகுபாடு இன்றி, பலரும், "மாநிலத்தின் அதிகார எல்லையில் தலையிடும் போக்கு இது; பிரிட்டிஷாரின் ஆட்சியின்போதுகூட மாநிலங்களுக்கு அதிக சுதந்திரம் இருந்தது; உண்மையைச் சொல்ல வேண்டுமானால், சென்னை அரசாங்கம் டில்லி அரசாங்கத்தின் தயவில்தான் வாழ்கிறது" என்று எடுத்துக் காட்டி, கண்டித்திருக்கின்றனர்.

இப்போது, மருந்துகளையும், அதற்கான பொருள்களையும் உற்பத்தி செய்வது, விநியோகிப்பது ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிற அதிகாரத்தையும், 'புராதனச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம்' என்ற பெயரால் கோவில்களின் நிர்வாக அதிகாரத்தையும், சென்னை போன்ற மாநிலங்களிடமிருந்து மத்திய ஆட்சி பிடுங்கிக்கொள்வதற்கான திட்டங்கள் தயாராவதாகச் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

இப்படியே, மாநில அரசாங்கங்களை வெறும் வரி வசூலிக்கும் 'ஏஜெண்டு சர்க்காராக' சிறிது சிறிதாக மாற்றி வருகிற டெல்லியின் ஆதிபத்தியப் போக்கை, நாம் அடிக்கடி எடுத்துக் காட்டி, கண்டித்தும் வந்திருக்கிறோம்.

இப்போது டெல்லி ஆட்சியாளர்கள், மாநிலங்களிடமிருந்து, மேற்குறிப்பிட்ட அதிகாரங்களைத் தட்டிப் பறிக்கும் வேகத்தைப் பார்த்தால், இந்த நாட்டு மக்களையும், அவர்களுக்காக அமைந்திருப்பதாகச் சொல்லப்படுகிற மாநில ஆட்சிகளையும், எங்கு கொண்டுபோய் நிறுத்தும் என்பதை நாம் கூறத் தேவையில்லை.

இந்தியப் பேரரசின் இந்த விபரீதப் போக்கு, டெல்லியின் ஏகாதிபத்திய எண்ணத்தை உறுதி செய்வதாக அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. இன்று, ஒவ்வொன்றாக மாநிலங்களிடமிருந்து அதிகாரங்களைப் பிடுங்கிக்கொண்டு, மாநில ஆட்சிகளை வெறும் 'பொம்மை'களாக ஆக்கி வருகிற டெல்லியின் எண்ணம், நாளை — 'ஏன் இத்தனை மாநிலங்கள்; ஏன் தனித் தனி சட்டசபைகள், ஆட்சி பீடங்கள்; எல்லாவற்றிற்குமாக ஒரே சட்டசபையும் ஆட்சிபீடமும் போதுமானது; தொல்லை தரும் மாநில எல்லைகளை அழித்துவிடுகிறோம்,'— என்று, மேற்கு பாகிஸ்தானை ஒரே அங்கமாக இணைக்கிறார்களே, அதே போன்று இங்குள்ள மாநிலங்களையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைத்துவிட நாட்டு ஆட்சியாளருக்கு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏற்கனவே அங்கு இம்மாதிரியான எண்ணம் நிலவுவதுடன், இரண்டொரு 'தீவிரவாதி'கள், அம்மாதிரி இந்தியா முழுவதையும் ஒரே அங்கமாக இணைத்து, பல்வேறு சட்டசபைகளையும், ஆட்சிபீடங்களையும் அழித்து ஒரே ஆட்சியின் கீழ் ஆள வேண்டும் என்று பேசியும் வருகிறார்களாம்.

'எது எப்படி யாயினும், நமக்கு மந்திரி என்ற ஒரு பெயர் இருக்கிறது; சட்டசபை உறுப்பினர் என்ற கௌரவம் இருக்கிறது,' என்ற எண்ணத்தில் அற்பமகிழ்ச்சியில் திளைத்திருப்பவர்களைத் தவிர, நியாய உணர்வும், மக்களாட்சிப் பண்பில் விசுவாசத்துடன் கூடிய நம்பிக்கையும் கொண்ட எவரும், மத்திய அரசாங்கம் படிப்படியாக மாநில அரசாங்கங்களை விழுங்கிவரும் இந்த ஆபத்தான நிலையைச் சரியென ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்றே கருதுகிறோம்.

மாநிலங்களிலேயே, மாவட்ட ஆட்சி மன்றங்கள், நகரசபைகள், பஞ்சாயத்து மன்றங்கள் இவைகளிடமெல்லாம் அதிகமான அதிகாரங்கள் தரப்பட வேண்டும். இம்மாதிரி, மக்களின் நேரடிப் பிரதிநிதித்துவம் பெற்ற மன்றங்களிடம் அதிகாரங்கள் இருப்பதுதான் நல்ல மக்களாட்சிப் பண்பிற்கு உகந்தது.

எனவே, 'அதிகாரங்கள் நிரம்ப எங்களுக்கு வேண்டும்,' என்ற வேட்கை வளர்ந்துவரும் இந்த நாட்களில், டெல்லி ஆட்சிபீடம் மாநிலங்களிடம் உள்ள அதிகாரங்களையே தட்டிப் பறித்துக்கொள்கிறது என்ற செய்திகள்—அந்த டெல்லி ஆட்சியினர், தங்களையே சர்வாதிகாரிகளாக ஆக்கிக் கொள்ள ஏற்கெனவே திட்டமிட்டுள்ளபடி செய்துவரும் நடவடிக்கைகள் —என்பதைத்தான் சொல்கின்றன!

தமிழ்ப் பண்பாடு குறித்து ஆராய்ச்சி செய்க!

ஐ. நா. சபையின் கலாச்சாரப் பிரிவிற்கு பேராசிரியர் தனிநாயகம் வேண்டுகோள்

கோலாலம்பூர், ஜன. 21—

வெளிநாடுகளில் நிலவும் தமிழ் பண்பாடு குறித்து, ஒரு பெரும் ஆராய்ச்சி நடத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, சமூக, கலாச்சார நிறுவனத்திற்கு பிரபல தமிழ் பேராசிரியரான ரெவி. எஸ். தனிநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூட்டமொன்றில் பேசிய அவர், 'இந்திய கலாச்சாரம் என்பதில் நான்கில் மூன்று பகுதி, தமிழர் கலாச்சாரம்தான்,' என்று வங்காள பேராசிரியரான டாக்டர் சுகுமார் சட்டர்ஜி குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்காட்டி, இது, உலகத்தில் உள்ள கலாச்சாரங்கள் பலவற்றிலும், தமிழ்ப் பண்பாடு எவ்வளவு ஊடுருவி இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"பாங்காங் நகரில் உள்ள பாதிரியார்கள் இன்றும், மன்னர் குல நிர்மாண விழாக்களின்போது தமிழ் மொழியில் உள்ள பாடல்களை ஒப்புவிப்பதைக் காண்கிறோம்," என்றும் திரு. தனிநாயகம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில், கானடாவின் உதவிபெற்று, நிர்மாண வேலைகள் நடைபெற்றுவரும், உம்த்ரு ஜல—மின்சாரத் திட்டம் அசாமில் உள்ளது.

நாகர்களின் சுதந்திரக் கோரிக்கை

இந்திய சுதந்திரத்திற்கு முன்பே எழுந்தது

அசாம் முதல் மந்திரி தகவல்

சென்னை, ஜன. 23—

"நாகர்களின் சுதந்திரக் கிளர்ச்சி இந்திய அரசாங்கத்திற்கும் — அசாம் அரசாங்கத்திற்கும் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது; நாகர்களின் தொகை சுமார் 2 லட்சம்; அவர்கள் சுமார் 22 மொழிகள் பேசுகின்றனர்,"

என்ற தகவலை அசாம் முதன் மந்திரி பிஷ்ணுராம் மெஹ்தி பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் வெளியிட்டுள்ளார்.

"நாகர்களின் சுதந்திரக் கிளர்ச்சி, இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே துவங்கப் பட்டது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"நாகர்கள் ஏதேனும் பலாத்காரச் செய்கைகளில் ஈடுபட்டாலன்றி அரசாங்கம் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளுவதில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது மலைவாசிகளுக்கான பள்ளிக்கூடங்களை அசாம் சர்க்கார் மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

8,228 இந்தியர் இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளனர்

கொத்தலாவலை தரும் தகவல்

இதுவரை 8,228 இந்தியர்கள் இலங்கையைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள் என்ற தகவலை இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை இலங்கை மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இவர்களில் 2,047 பேர் தங்களின் தங்கும் அனுமதிச் சீட்டுகள் காலாவதியாகிவிட்டதினால் கடந்த ஆகஸ்டு 10-ந் தேதிக்குப் பிறகு வெளியேறியுள்ளனர்.

மற்ற 6,181 பேர்கள் புதிய 'பாஸ்போர்ட்'டுகளுடன் வெளியேறியுள்ளனர். இலங்கையில் வசிப்பதற்கான அனுமதிச் சீட்டுகள் காலாவதியாகிவிட்ட பின்னும் இலங்கையிலேயே இன்னும் வசித்துக் கொண்டிருப்பவர்கள் 35,000 பேர்கள் இருக்கிறார்கள்; அவர்களது முகவரிகள் அரசாங்கத்திடம் இருக்கின்றன என்றும் கொத்தலாவலை கூறியிருக்கிறார்.

அத்தியாவசியப் பொருள்கள் உற்பத்தி

சட்டம் நீடிக்கிறது

அத்தியாவசியப் பொருள்களுக்கான சட்டத்தின் ஆயுட்காலத்தை மேலும் ஓராண்டிற்கு நீடித்து இந்தியக் குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

'1955-ம் வருடத்திய அத்தியாவசியப் பொருள்கள் சட்டம்' என்ற பெயருடைய அந்தச் சட்டம் ஜன. 26-ந் தேதியுடன் முடிவடையவிருந்தது.

இது, சில குறிப்பிட்ட பொருள்களை உற்பத்தி செய்ய, விநியோகிக்க, வர்த்தகம் செய்ய மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கிறது. நிலக்கரி, மோட்டார் சாமான்கள், பருத்தி, கம்பளி துணிகள், இரும்பு, உருக்கு, காகிதம், சர்க்கரை, பெட்ரோலியப் பொருள்கள், வனஸ்பதி தாவர எண்ணெய், உப்பு முதலிய பொருள்கள் அச்சட்டத்தின்கீழ் உள்ளது.

குடும்பப் பொருளாதார பயிற்சி தர முயற்சி

கிராம சேவிகைகளுக்குக் குடும்ப பொருளாதாரத்தில் பயிற்சியளிப்பதற்கான திட்டமொன்றை இந்திய சர்க்கார் ஆரம்பித்திருக்கின்றனர். பயிற்சி முடிந்த பின், சமூக நல அபிவிருத்திப் பிர்க்காக்களிலும், தேசிய விஸ்தரிப்புத் திட்ட வட்டாரங்களிலும் மக்களின் குடும்ப நல அபிவிருத்தியைக் கவனிக்கும் பணியில், இச்சேவிகைகள் ஈடுபடுவார்கள்.

40,000 வீடுகள் கட்டப்படும்

ரூ. 30 கோடியில் உ. பி. சர்க்கார் திட்டம்

லக்னோ, ஜன. 21—

குறைந்த சம்பளம் பெறும் மக்களுக்கு வீடுகள் கட்டித் தர வசதியளிக்கும் பொருட்டு, உத்திரப் பிரதேச சர்க்கார், 'பொருளாதாரக் கார்ப்பரேஷன்' ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறது. இதன் மூலதனம் சுமார் ரூ. 30 கோடி என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

அடுத்த ஐந்தாண்டுகளில் 40,000 வீடுகள் கட்டப்படுமாம். பெரும் நகரங்களில் காணப்படும் இடநெருக்கடியைச் சமாளிக்கவே இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான பணம், மத்திய சர்க்கார், உ. பி. சர்க்கார், நகரசபைகள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் என்று தெரிகிறது.

'என் வாழ்க்கை துணைவரை தேர்ந்தெடுத்துவிட்டேன்!'

'முடிவை மாற்ற யாராலும் முடியாது'

நீதிமன்றத்தில் இளம் பெண்ணின் உறுதி

பம்பாய், ஜன. 21—

"நான் அவரை எனது வாழ்க்கைத் துணைவராகத் தேர்ந்தெடுத்துவிட்டேன்; என் மனதை எதனாலும் மாற்ற முடியாது,"

என்று, 19 வயதுடைய இளம் பெண் ஒருவர் பம்பாய் நீதிமன்றம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

குசும் புருஷோத்தம் என்ற பெயருடைய 19 வயது இளம் பெண்ணின் தந்தை, தன் மகள் தேர்ந்தெடுத்த வாலிபனைத் திருமணம் செய்துகொள்ள அவளை அனுமதிக்க முடியாது என்று கூறிவிட்டாராம்.

அப்பெண், பம்பாய் எஸ்பிளனேட் நீதிமன்ற பதிவு அதிகாரியின் முன்பு சென்று, திருமண அறிவிப்பு செய்யுமாறு கேட்டுக் கொண்டாராம்.

இதற்கிடையில் அப்பெண்ணின் தந்தை தத்தாராம் என்ற அந்த இளைஞன்மீது தன் பெண்ணை கடத்திச் சென்றதாக வழக்குத் தொடர்ந்தார்.

நீதிமன்றத்தில், தந்தையின் சார்பில் வழக்கறிஞர் வாதிடுகையில், "குசும் புருஷோத்தம் 19 வயதுடைய பெண் என்றாலும், அப்பெண்ணிற்கு தனது வாழ்க்கையின் எதிர்காலத்தை தானே நிர்ணயிக்கும் அளவுக்கு மனப்பக்குவம் இல்லை" என்றார்.

"இக்காலத்தில், வாலிபர்கள் பலர், நல்ல குடும்பத்தின் பெண்கள் முன்னிலையில் சினிமாப்பாட்டுகளைப் பாடியும், சேஷ்டைகள்' மூலமாகவும் பெண்களை வசீகரித்து விடுகின்றனர்" என்று அவர் மேலும் கூறினார்.

மாஜிஸ்திரேட் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில், அப்பெண், "நான், எனது வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுத்துவிட்டேன்; எனது முடிவை மாற்ற முடியாது" என்று பதில் அளித்தாராம்.

பெண், சாரதானந்த ஆசிரமத்தில் ஏழு நாட்களுக்கு வைக்கப்பட வேண்டுமென்று மாஜிஸ்திரேட் உத்திரவு பிறப்பித்ததுடன், அதற்குப் பின்னரும்கூட, அப்பெண் தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் திருமணத்தைத் தடுக்க எதுவும் செய்ய முடியாது என்றும் குறிப்பிட்டாராம்.

இளைஞனின் மீது, பெண்ணைக் கடத்திச் சென்றதாகத் தொடரப்பட்ட வழக்கு பின்னர் விசாரணை செய்யப்படும் என்று தெரிகிறது.

கழகச் செய்திகள்

சட்டையம்புதூர் தி. மு. க.

13—1—55-ல் நடைபெற்ற கழக நிர்வாகிகள் தேர்தலில் செயலாளராக எஸ். நடேசனும். துணை செயலாளராக மு தர்மலிங்கமும், பொருளாளராக ப. அர்த்தநாரியும், செயற்குழு உறுப்பினர்களாக வை. கந்தசாமி, ஏ. கெட்டிமுத்து, ஏ. கந்தசாமி, எம். அங்கமுத்து, ஏ. சொக்கப்பன், எம். அருணசலம், டி. சுந்தரம், ஏ. நாட்டராயன், பி. ஆறுமுகம், ஓ அர்த்தநாரி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உண்ணுமலை சமுத்திரத்தில் தி. மு. கழகத் துவக்கம்

வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டம் உண்ணுமுலைசமுத்திரத்தில் 14—1—55ல் தி. மு. க. கிளை ஆரம்பிக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: கணேசன்; துணைச் செயலாளர்: ராசு; பொருளாளர்: ரேணு; மாவட்டப் பிரதிநிதிகள்: சக்கரை, வடிவேல். மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக 13 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

14—1—55ல் தோழர் கணேசன் தலைமையில், கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் ஆ. மணிஎழிலன், திராவிட மணி, வே. ஆ. இளஞ்செழியன், அ. கருத்தோவியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அன்று மாலை 5 மணிக்கு திருமணி, ஒய்யாத்தூர் ஆகிய ஊர்களில் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டு ஊர்வலமும் நடைபெற்றது.

கல்த்தாம்பாடி தி. மு. க

14—1—55ல், இவ்வூரில் தி. மு. கழகம் நிறுவப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: கோ. கண்ணன்: துணைச் செயலாளர்: வெ. கோவிந்தசாமி; பொருளாளர்: கி. முனுசாமி; விளம்பர உறுப்பினர்கள்: க. வீராசாமி, ச. சின்னத்தம்பி.

திருநாகேசுவரம் தி. மு. கழகத் துவக்க விழா

15—1—55 மாலை 5 மணிக்கு, தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்ற கழகத் துவக்க விழாவில் தோழர் என். சி. பன்னீர்ச்செல்வம் கழகக் கொடியை ஏற்றிவைத்து, கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

பின்னர், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : ஜி. பூவராகன், துணைச் செயலாளர்: கே. இராமசாமி ; பொருளாளர் : எஸ். ஏ. சந்திரன், மாவட்டப் பிரதிநிதி கே. இராமு.

நச்சலூர் தி. மு. கழகம்

திருச்சி குளித்தலை தாலூகா நச்சலூர் தி. மு. கழகத் தேர்தல் தோழர் சி. பூ. போலன் தலைமையில் 15—1—55-ல் நடைபெற்றது. தோழர்கள் ந. ச. ரெங்கசாமி செயலாளராகவும், துணைச் செயலாளராக ரா. நல்லுசாமியும், பொருளாளராக சி. போ. ராமசாமியும், மாவட்டப் பிரதிநிதியாக ந. ச. ரெங்கசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கும்மிடிபூண்டி தி. மு. க.

16—1—55 இரவு 8 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், புதுகும்மிடிபூண்டியில் தோழர் சி. என். முனுசாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பிரச்சாரக் கூட்டத்தில் தோழர்கள் ப. செ. தூயமணி, ஆ. கிருஷ்ணன், இராமகிருஷ்ணன், இராதாமணாளன் ஆகியோர் மூடப்பழக்கவழக்கங்கள் பற்றியும், கடவுள், மதம் ஆகியவைகளால் மக்கள் சீரழிந்தநிலையையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

ஆனையாம்பட்டி தி. மு. க.

18—1—55 இரவு 9 மணிக்கு, தோழர் ஆர். மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், பொங்கல் விழா வரவு—செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்ட பின், தோழர் எஸ். அப்பாவு அவர்களின் விலகுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்குப் பதிலாகத் தோழர் ஆர். மாரிமுத்து செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாளையம் தி. மு. கழகம்

19—1—55 மாலை 5 மணிக்கு தோழர் ஏ. ராசகோபாலன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், விரைவில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், 'நச்சுக்கோப்பை' எனும் நாடகம் நடத்துவதென்றும், விரைவிலேயே ஆண்டுவிழாவும் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டு, மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஊரக்கரையில் தி. மு. கழகத் துவக்க விழா

19—1—55 மாலை 5 மணிக்கு தோழர் முத்துக்கருப்பன் அவர்கள், கழகக் கட்டிடத்தைத் திறந்து வைத்து கொடியேற்றினர். பின்னர், மாரியம்மன் கோவில் மைதானத்தில் துறையூர் தோழர் பி. அரங்கசாமி எம்.எல்.ஏ. தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் முத்துக் கருப்பன், அழகமுத்து, எஸ். நெடுமாறன் ஆகியோர் சமுதாய சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

கீவளூர் தி. மு. கழகம்

19—1—55 மாலை 5 மணிக்கு தோழர் முத்து தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழகக் கட்டிடத்தில் படிப்பகம் ஒன்று துவங்குவதெனவும், பிப்ரவரி இறுதியில், ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், கழகத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக நாடகம் நடித்து பொருள் திரட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய் தி. மு. கழகம்

25-12-54ல், பம்பாய்-தாராவி, 'திராவிடர'கத்தில், தோழர்கள் சு. வள்ளிநாயகம் முன்னிலையிலும், எஸ். தியாகராசன் தலைமையிலும் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது :—செயலாளர் : சி. த. மு. இர. ஆரியசங்காரன்; துணைச் செயலாளர்: சா. தர்மராசன்; பொருளாளர்: கே. எஸ். கண்ணதாசன்; செயற்குழு உறுப்பினர்கள் : என். வி. நயினர், இரா. மா. சண்முகராசன், எஸ். தியாகராசன், எஸ். வள்ளிநாயகம், வடவைக் குயில், புத்தரசு, எஸ். தங்கையா, த. மு. பொற்கோ, ஏ. எல். பெருமான், பி. எஸ். செல்லையா, ம. இரா. ஏ. ரெத்தினசாமி, மா. இர. குறள்தாசன், ம. அண்ணமலை, கோதைராசன், டி. வி. துரை, எஸ். ஏ. செல்லையா, சொல்லழசன், எம். எஸ். கணபதி.

* * *

16—1—55 மாலை 6½ மணிக்கு தோழர் சு. வள்ளிநாயகம் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. படிப்பகத்தின் பொறுப்பாளர்களாகத் தோழர்கள் என். வி. நயினர் இரா. மா. சண்முகராசனும் தணிக்கையாளராக தோழர் எஸ். தியாகராசனும், மாவட்டப் பிரதிநிதிகளாக தோழர்கள் சு. வள்ளிநாகம், எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, ஏ. எல். பெருமாள் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செய்திச் சுருள்

துறையூர் தி. மா. மு. கழக துவக்க விழா

16—1—55 காலை 9½ மணியளவில், மேற்படி கழகத் தோழர் எழில்வண்ணன் தலைமையில், பாரதி தியேட்டரில் நடைபெற்றது. தோழர்கள் து. ப. அழகமுத்து, எம். எஸ். மணி, க. அறிவழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், தோழர் க. அன்பழகன் அவர்கள், திராவிடத்தின் பெயர் காரணம், அதன் நிலை அன்றும் இன்றும், மாணவர் கழகத்தின் கடமை ஆகியவை குறித்து சொற்பொழிவார்றினர்.

அண்ணு அறிவகம் திறப்பு விழா பொதுக்கூட்டம்

14—1—55 இரவு 7½ மணிக்கு, செங்காட்டுப்பட்டி பஜனை மடத்திற்கு முன், தோழர் தி. போ. நாராயணசாமி தலைமையில் அண்ணு அறிவகத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் நா. செல்வராசு அவர்கள் அறிவகத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றியபின், தோழர் மூ. குருசாமி அவர்கள் அறிவகத்தின் விதிகளை வாசித்தார். பின்னர், தோழர்கள் வி. அருணசலம், அரு. ஆதிமுலம், சி. இளஞ்சேரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அண்ணு மன்றம் துவக்கம்

14—1—55 காலை 10 மணிக்கு வேலூரில் (சேலம்) தோழர் மாரியப்பா தலைமையில், தோழர் வி. ஏ. இராமநாதன், 'அண்ணு மன்றத்'தைத் திறந்து வைத்துப் பேசிய பின் தோழர் எஸ். நாராயணசாமி வாழ்த்திப் பேசினர். பின்னர் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர் : ஆர். தியாகராசன் ; செயலாளர்: வி. ஏ. இலக்குமணன் ; துணைச் செயலாளர் : ஆர். இரத்தினசபாபதி ; பொருளாளர் : கே. காசிலிங்கம். நிர்வாக உறுப்பினர்கள் 19 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பகுத்தறிவு மன்றம் துவக்கம்

வெள்ளைக்கோட்டை (அருப்புக்கோட்டை) மேலத் தெரு இளைஞர்கள் சார்பில் 1—12—54ல் 'பகுத்தறிவு மன்றம்' நிறுவப்பட்டு அதற்கான நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: மா. சி. சுந்தரமகாலிங்கம்; பொறுப்பாளர் : பா. சங்கரலிங்கம்; பொருளாளர் : க. சங்கரலிங்கம். நிர்வாக உறுப்பினர்கள் :—எம். எஸ். நாதன், கு. பொன்மாடசாமி, சொ. சங்கரலிங்கம், ம. குருசாமி, க. வா. பூவந்தான்.

வ. உ. சி. நினைவுப் படிப்பகத் துவக்க விழா

14-1-55ல் அச்சம்பத்து கிராமத்தில் தோழர் நீ. சனர்த்தனன் தலைமையில் மேற்படி படிப்பகத் துவக்க விழாவை மதுரை தோழர்கள் எஸ். முத்து, கே. எஸ். சந்தானம், அப்துல்கனி ஆகியோர் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர், இக்கிராமத்தைப் பஞ்சாயத்துப் போர்டாக ஆக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆலத்தூர் பட்டணம் ஓராசிரியர் பள்ளி துவக்கம்

14—1—55 காலை, இவ்வூரில், கிழக்குக்காடு பெரியதம்பி உடையார் தலைமையில் ஓராசிரியர்பள்ளியொன்று துவக்கிவைக்கப்பட்டது தோழர்கள் பி. என். பெரியதம்பி, பி. என். செங்கோடு, சிதம்பரம், முத்து, கே. வி. கே. இராமசாமி ஆகியோர் கல்வியின் அவசியம், மாணவர் ஒழுக்கம் ஆகியவை பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

சதாசிவம் நூல் நிலையம்

16—1—55ல், குனியமுத்தூரில், நடைபெற்ற மேற்படி நிலையச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர் எம். சதாசிவம் தலைவராகவும், தங்கமாணிக்கம் செயலாளராகவும், மற்றும் 3 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் தோழர் பொன்னம்பலனர் (அரசினர் கலைக் கல்லூரி ஆசிரியர். கோவை) தலைமையில் நடைபெற்ற நிலைய திறப்பு விழாவில் தோழர்கள் பழனியப்பன், எம். அய்யாசாமி, தங்கமாணிக்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பாரதிதாசன் நூல் நிலையம்

16—1—55 காலை 10 மணிக்கு சென்னை அயன்புரம் நூல் நிலையக் கட்டிடத்தில், தோழர் சி. கே. ஆதிமூலம் தலைமையில் நடைபெற்ற நூல் நிலையப் பொது உறுப்பினர் கூட்டத்தில் புதிய செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ந. வீரபத்திரன்; துணைச் செயலாளர்: ந. இராமு; பொருளாளர்: வை. மேகநாதன. செயற்குழு உறுப்பினர்கள்: கோட்டி, வை. நரசிம்மன், அ. கோ. தனபாலன், குலசேகரன், சி. கே. ஆதிமூலம், ஜகந்நாதன், அரங்கநாதன், லோகநாதன், அ தாசன், பார்த்தசாரதி.

சென்னை மாநில வெற்றிலை வியாபாரிகள் சங்கம்

7—1—55 மாலை 6 மணியளவில், சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு, தென்ஞற்காடு மாவட்ட வெற்றிலை வியாபாரிகள் மகாசபைக் கூட்டம் திரு. எஸ். சூரியநாராயணன் தலைமையில் நடைபெற்றது. இம்மாதம் இறுதியில் மாநாடொன்று வேலூரில் நடத்துவதென முடிவு செய்து, அம்மாநாட்டிற்கான வரவேற்புக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

சென்னை மாநில சர்க்கார், விற்பனை வரி செலுத்துவதில் வியாபாரிகளுக்குக் காட்டியிருக்கின்ற புதுச் சலுகைகளைப் பாராட்டியும், இந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு மாநிலத்திலுள்ள வியாபாரிகளெல்லோரும், தங்கள் தங்கள் விற்பனைக் கணக்குகளை மறைத்து வந்திருந்தாலும் உடனடியாகத் தைரியமாக முன்வந்து தங்கள் கணக்குகளைக் காட்டி விற்பனை வரி பாக்கியைச் செலுத்திவிடுமாறு கேட்டுக்கொண்டும், சென்னை மாநில வெற்றிலை வியாபாரிகள் சங்கச் செயலாளரான திரு. எஸ். சூரியநாராயணன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

மீனவர் ஐக்கிய முன்னணி கிளை ஆரம்பக் கூட்டம்

6—1—55 மாலை 5 மணிக்கு, புதுவை சின்ன காலாபட்டில் திரு எல். பூங்காவனம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி கிளையின் ஆரம்பக் கூட்டத்தில் தோழர்கள் என். ஜீவரெத்தினம், கே. குப்புராஜ், சி. ஏ. முகிலன் மற்றும் பலர், மீனவர் ஒற்றுமையை விளக்கிப் பேசினர்கள்.

* * *

7—1—55 மாலை 5 மணிக்கு, புதுவை பெரிய காலாபட்டில், திரு. ரா. முனுசாமி தலைமையில் நடைபெற்ற கிளையின் ஆரம்பக் கூட்டத்தில் தோழர்கள் என். ஜீவரத்தினம், கே. குப்புராஜ், சி. ஏ. முகிலன், மற்றும் பலரும் 'மீனவரும் தற்கால நிலையும்' என்பது பற்றிப் பேசினர்கள்.

ஆண்டு விழா

வண்ணை தி. மு. கழகத் தோழர் எஸ். பி. பி. சாமி அவர்களுக்கு உரிமையான 'சற்குணகேப்' உணவு விடுதியின் 3-வது ஆண்டு விழா 13-1-55 காலையில் தி. மு. கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

போராட்டம் ஒத்திவைப்பு

11—1—55 மாலை 5 மணிக்கு குரோம்பேட்டை காந்திநகர் மைதானத்தில் சென்னை சர்க்கார் கோச் பில்டிங் பாக்டரி அண்டு டிரான்ஸ்போர்ட் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம், தோழர் ஜி. எம். மதுரையார் தலைமையில் நடைபெற்றபோது, 29—12—54 காலை 10-30 மணியிலிருந்து 11—1—55-ம் தேதி வரையில் சாத்வீக முறையில் நடத்திவந்த "கொடுத்திருக்கும் பெயருக்கும், சம்பளத்திற்கும் தகுந்த வேலை செய்வது" என்ற போராட்டத்தை, முதலமைச்சர் காமராசர் அவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் 12—1—55 யிலிருந்து 31—1—55 வரையில் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டதுடன், இப்பிரச்சினையில் சமரசம் செய்ய முனைந்ததற்கு முதலமைச்சருக்கும், அமைச்சர் பி. பரமேசவரனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மின்சார—வீதி விளக்குகள் துவக்க விழா

14—1—55 மாலை 7 மணியளவில், வேடப்பட்டி பஞ்சாயத்துக் குழுவினரால், வேடப்பட்டி, வன்னியம்பாளையம், இன்னும் சில சுற்றுப்புற ஊர்களிலும் வீதிவிளக்குகள் நிறுவப்பட்டு, கோவை மாவட்டக் கழகத் தலைவர் டி. டி. எஸ். திப்பையா துவக்கிவைத்தார். தோழர்கள் வி. அருச்சுனன், சி. ஏ. இராமலிங்க அய்யர், கிருஷ்ணசாமி, வி. கருப்பண்ணக் கவுண்டர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை சட்டசபை சபாநாயகருக்கு வரவேற்பு

பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சபையின் சார்பில், 10—1—55 மாலை 5 மணிக்கு பம்பாய் சயான் புகைவண்டி நிலயத்தில், சென்னை சட்டசபைத் தலைவர் சிவசண்முகம் அவர்களை நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அன்று மாலை 7 மணிக்கு தாராவி கணேசர் கோயில் சதுக்கத்தில் ஓர் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. பல சங்கங்கள், நிறுவனங்கள் சார்பில் அவருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

வரவேற்பு

9—1—55ல், மதுரை குமாரவேல் மன்றச் சார்பில் தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்விக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்குப் பின் கருத்துரைகள் வழங்கினர்.

* * *

வடுகபட்டி திருக்குறள் மன்றச் சார்பில், தோழர் கலைமன்னன் தலைமையில் 12—1—55ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி "திருக்குறளில் திருத்தமா ?" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

பாடல் போட்டி

சென்னை புதுவண்ணை திருவொற்றியூர் பெரியசாலை நகராண்மைக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளியில், 10—1—55 மாலை 5 மணியளவில், மாணவர் சங்கச் சார்பில், திரு. க. சுப்பராயன் தலைமையில் நடைபெற்ற மாணவர் பாடல் போட்டியில், தோழர்கள் பூதநாதன், அரிசங்கரன் ஆகிய இருவரும் முதல், இரண்டாம் பரிசும், அனுசூயா, வசந்தா ஆகிய இருவரும் மூன்றும் பரிசும் பெற்றனர்.

'இரத்தக்களம்'—நாடகம்

15—1—55 இரவு 10 மணிக்கு, பண்ணைப்புரம் காந்திஜி அரங்கில், வல்லவராயன்பட்டி வள்ளுவர் படிப்பக நிதிக்காக, கருணநிதி கலா மன்றத்தார் நடித்த 'இரத்தக்களம்' நாடகம், தோழர் இரா. சு. தங்கப்பழம் தலைமையில் நடைபெற்றது.

இந்தியப் பேரரசின் ஆதிக்க வெறி!

மருந்து உற்பத்திக் கட்டுப்பாடு அதிகாரங்களையும் மாநிலங்களிடமிருந்து பறிக்கிறது

ஆபத்தை விளைவிக்கும் மருந்து உற்பத்திசாலை பற்றி கண்டனம்

ராஜ்கோட், ஜன. 24—

மருந்துகள், மருந்துச் சாமான்கள் ஆகியவற்றின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை மாநில அரசாங்கங்களிடமிருந்து, மத்திய அரசாங்கம் வெகு சீக்கிரமே எடுத்துக்கொள்ளும் எனத் தெரியவருகிறது.

என்றாலும், மாநில அரசாங்கங்களிடம் அத்தகைய பொருள்களின் விற்பனை விநியோகம், விலை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்கள் தொடர்ந்து இருக்குமாம்.

இந்திய சர்க்கார் நியமித்திருந்த மருந்து பற்றிய விசாரணைக் குழு தனது அறிக்கையில், இந்தியாவில் உள்ள மொத்தம் 1643 மருந்து உற்பத்திக் கம்பெனிகளில் 75 மட்டுமே கம்பெனிகள் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளனவென்றும், எஞ்சியுள்ள 1,568 கம்பெனிகளும் மிகச் சிறிய நிறுவனங்களாகும் என்றும் குறிப்பிட்டுள்ளதாம்.

இந்தச் சிறிய நிறுவனங்களில் பெரும்பாலானவை சுகாதாரமற்ற இடங்கள்; ஜன நெருக்கடியான இடங்கள், கிடங்குகள், கொட்டகைகள் ஆகியவற்றில் அமைந்திருக்கின்றன என்றும், இவைகளுக்குச் சொந்தத்தில் பரிசோதனைசாலைகள் இல்லை என்றும் அந்தக் குழுவின் அறிக்கையில் காணக்கிடக்கிறது.

அத்தகைய சிறு நிறுவனங்கள் மக்கள் உடல் நலத்திற்குப் பெரும் தீங்கு பயப்பனவாகும் என்பது மட்டுமின்றி, நன்கு அமைந்த மருந்து உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்கும் தடையாயிருக்கிறது என்றும் அந்த விசாரணைக் குழு குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

மாநில அரசாங்கங்கள் அமுல் செய்யும் மருந்துச் சட்டம் இருந்தாலும்கூட இந்த சிறிய மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியனவாகும்.

ஆள்பவராயிருக்கும் நேரு 'ஆண்டவராக'வும் ஆகிறார்!

பிரதமர் பண்டித நேருவுக்கு ஆவடி மாநாட்டில் தங்கக் கிரீடம் ஒன்று சூட்டப்பட்டது.

பிரதேச காங்கிரஸ் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரின் கூட்டத்தில், சோஷலிச அமைப்புடன் கூடிய சமுதாயத்தை நிறுவ வேண்டுமென்று 'மிக வலியுறுத்தி'ப் பேசிய பண்டிதர் நேருவுக்கு 55 வயதுடைய ஆந்திரப் பெண்மணி ஒருவர் விலை மிகுந்த கற்கள் பதிக்கப்பட்ட தங்கக் கிரீடம் ஒன்றைச் சூட்டியிருக்கிறார்.

இந்தக் கிரீடத்தைச் சூடிக்கொள்ள நேரு முதலில் மறுத்தாலும், அந்த 'மாது சிரோமணி'யின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகவாவது சூடிக்கொள்வது என்று இசைந்து விட்டாராம்!

ஆண்டவனின் அவதாரம்!

ஏலூரு கங்கம்மாள் என்ற பெயருடைய அப்பெண்மணி, அக்கிரீடத்தை நேருவுக்குச் சூட்டுகையில், 'நேரு ஒரு ஆண்டவனின் அவதாரம்,' என்று கூறியிருக்கிறார். மேலும் அவர், 'எனது சிறு சிறு சேமிப்புகளைக் கொண்டு, பிரதம மந்திரிக்காகவே நான் இந்தக் கிரீடத்தைச் செய்து முடித்தேன்' என்றும் கூறியிருக்கிறார்.

பண்டித நேரு விரும்பியதுதானே!

சென்னையில் நடைபெற்ற 60-வது காங்கிரஸ் மாநாட்டின் பேரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டபின், கூடியிருந்த மக்கள் மேடைக்கருகே விரைந்து, 'நேருவை நாங்கள் பார்க்கவேண்டும்' என்று கூச்சல் போட்டிருக்கிறார்கள்.

சென்னை கவர்னரால் யூகோஸ்லாவிய தலைவர் மார்ஷல் டிட்டோவுக்கு அளிக்கப்பட்ட விருந்தொன்றில் கலந்துகொள் நேரு சென்றுவிட்டதாக, மாநில முதலமைச்சர் காமராசரும், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபரும், த. நா. காங்கிரஸ் தலைவர் கக்கனும் பலமுறை கூறியும், மக்கள் நெருக்கியடித்துக்கொண்டு நேருவைப் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்று சுமார் 10 நிமிட நேரமாகக் கூச்சல் போட்டிருக்கிறார்கள். இறுதியில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து சென்றிருக்கின்றனராம்.

ஆதாரக் கல்விமுறை மாநில சர்க்காரால் கவனிக்கப்படவில்லை

ஆவடி மாநாட்டில் குற்றச்சாட்டு

"ஆதாரக் கல்விமுறை மாநில சர்க்கார்களால் போதிய அளவுக்கு கவனிக்கப்படவில்லை என்றே கூறிவிடலாம். அதுமட்டுமல்லாமல், மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும் இதுவிஷயத்தில் தகுந்த வழியேதும் காட்டவில்லை.

"ஐந்தாண்டுத் திட்டத்தில் சாதாரணப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு ஏறத்தாழ 72 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் ஆதாரக் கல்விப் பள்ளிகள் ஆரம்பிக்க ரூ. 1 கோடிக்கும் அதிகமாக வேதான் ஒதுக்கப்பட்டது.

"நாம் தப்பான வழிகளிலேயே சென்று கொண்டிருக்கிறோம். சீக்கிரத்திலேயே சரியான வழிக்குத் திரும்பிவிட வேண்டும்."

இவ்வாறு பம்பாயைச் சேர்ந்த புரொபசர் என். ஆர். மால்கானி என்பவர், ஆவடி சத்தியமூர்த்தி நகரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசின் 60-வது மாநாட்டில், ஆதாரக் கல்வி முறை பற்றிய விஷயாலோசனைக் கமிட்டியில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒன்றிற்குத் திருத்தம் தெரிவித்துப் பேசியிருக்கிறார்.

மாநில சர்க்கார்களின் நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்படும்போது மொத்தம் ரூ. 450 நஷ்ட ஈடு தரவேண்டியிருக்கும்.

'மெயில்' இதழின் ஆசிரியர்

ஹெயில்ஸ் மறைவு

சென்னை, ஜன. 24—

சென்னையிலிருந்து வெளியாகும் 'மெயில்' என்னும் ஆங்கில தினசரியில் 27 ஆண்டுகளாக ஆசிரியராக இருந்த ஆல்பிரட் ஆர்தர் ஹெயில்ஸ், 22-ந் தேதி காலை இயற்கையெய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

சென்னை மாநிலத்தின் மிகச் சிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவராக ஹெயில்ஸ் விளங்கினார்.

இவருக்கு வயது 67. சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த ஹெயில்ஸ், இராயப்பேட்டையில் உள்ள தனது இல்லத்தில் மாரடைப்பினால் இயற்கை எய்தினார் என்று அறிகிறோம். இவர் தனது வாழ்வில் 43 ஆண்டுகள் பத்திரிகையாளராக இருந்தார்.

1887-ம் ஆண்டு மார்ச்சு 7-ம் தேதி பிறந்த இவர் லண்டனிலும், பாரிசிலும் கல்வி பயின்றார்; பின்னர், 1912-ம் ஆண்டு வரை லண்டனில் பத்திரிகையாளராக இருந்தார்.

1912-ம் ஆண்டு ஜனவரி 25-ந் தேதி சென்னை வந்து, 'மெட்ராஸ் டைம்ஸ்' இதழில் சேர்ந்தார்; பின்னர், அது, 'மெயில்' என்று பெயரிடப்பட்டது.

தென்னாட்டுச் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் அவர் நன்றாக அறிவார்.

அவரது திறமையைப் பாராட்டி, 1953-ம் ஆண்டில், பிரிட்டிஷ் அரசி, அவருக்கு ஓ.பி.ஈ. என்ற பட்டத்தை அளித்தார்.

ஹெயில்ஸ், சென்னை நகரசபையின் உறுப்பினராகவும், சென்னை போர்ட் டிரஸ்ட், தென் இந்திய மோட்டார் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். மோட்டார் சங்கத்தின் தலைவராகவும் அவர் பணியாற்றியிருக்கிறார்.

இவர் படகோட்டுவதில் மிகவும் விருப்பம் உள்ளவர்.

★

ஹர்பிலாஸ் சாரதா காலமானார்

சாரதா சட்டத்தை உருவாக்கிய சர். ஹர்பிலாஸ் சாரதா, தமது 88-வது வயதில், ஆஜ்மீரில் மரணமுற்றார். இவருடைய தீவிர முயற்சியின் காரணமாகத்தான், அவர், சட்டசபையிலிருக்கும்போது, பெண்களின் திருமண வயது குறைந்தது பதினாலாகவாவது இருக்க வேண்டுமென்று வற்புறுத்தித் தீர்மானிக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், அவர், அரசியல், சமூகப் பிரச்சினைகள் பற்றியும், மற்றும் பல அம்சங்கள் பற்றியும் பல புத்தகங்கள் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நெய்வேலித் தொழிலாளர் 71 பேர் கைது

வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்துக் கிளர்ச்சி

திருப்பாப்புலியூர், ஜன. 23—

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில், சுரங்கத்துக்கடியிலிருக்கும் தண்ணீரை வெளியே இறைப்பதற்கான இயந்திரம் இன்னும் வந்து சேராமையால், அங்கு வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, சுரங்க நிர்வாகி சர்க்கார் உத்தரவின் மீது 105 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறாரென்றும், நீக்கப்பட்ட 105 தொழிலாளிகளும், தாங்கள் வேலையிலிருந்து விலக்கப்படுவதை எதிர்க்கும் வகையில் வேலை நிறுத்தம் செய்ததோடு, வேலைக்குச் சென்று கொண்டிருந்த மற்ற தொழிலாளர்களையும் வேலைக்குச் செல்லக்கூடாதென தடுத்து நிறுத்தினதாகவும், நிலைமையைச் சமாளிக்க வந்த போலீஸ் படை, 16 அனுதாபிகள் உட்பட 71 தொழிலாளர்களைக் கைது செய்துள்ளது. என்றும் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இப்போது அமைதி நிலவுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

சென்ற டிசம்பர் திங்களிலிருந்தே பல தொழிலாளருக்கும் வேலையில்லாமலேயே ஊதியம் கொடுக்கப்பட்டு வந்ததாம். 14 நாட்களுக்கானசம்பளமும், 7 நாட்களுக்கான 'போன'சும் கொடுத்துத்தான் இந்த 105 பேரும் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். இவர்கள் மட்டுமல்லாமல் மற்றும் 50 பேர் வெகு விரைவிலேயே நீக்கப்பட்டுவிடலாம் என்றும் தெரியவருகிறது.

இதுவரையிலும் சுரங்கத்தில் 150 அடி வரைதான் தோண்டப்பட்டிருக்கிறது என்றும், இன்னும் 520 அடி தோண்டினால்தான் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்றும், இந்த வேலைகள் எல்லாம் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வந்த பிறகுதான் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இலங்கை — இந்தியா உறவு பற்றிய பேச்சு

ரயில் பிரயாணிகளுக்குக் கத்திக்குத்து

சென்னை, ஜன. 24—

இந்தியா—இலங்கை உறவுகள் பற்றிய காரசாரமான விவாதம், ஒரு ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த மூன்று பிரயாணிகளுக்கு கத்திக்குத்து ஏற்படுவதில் முடிந்ததாக செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

25 வயது மதிக்கத்தக்க இளைஞர், இலங்கையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தாராம். அவர் பிரயாணம் செய்துகொண்டுவந்த தனுஷ்கோடி 'பாசஞ்சர்' ரயிலில் வேறு மூவர், இந்தியா—இலங்கை உறவுகள் பற்றிப் பேசிக்கொண்டு வந்திருக்கின்றனர். அவர்களது பேச்சுக்கள் சிலவற்றைக் கேட்டு ஆத்திரப்பட்ட அந்த இளைஞன்' உச்சிப்புளி என்ற ரயில் நிலையத்தை அணுகும்போது தன்னிடமிருந்த கத்தியினால் அந்த மூவரையும் குத்திக் காயப்படுத்திவிட்டு, ஓடும் ரயிலிலிருந்து குதித்து ஓடித் தப்பிவிட்டதாகத் தெரிகிறது.

காயம்பட்ட மூவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்களாம்; ஒருவரின் நிலை அபாயகரமானதாயுள்ளதாம்.

கோவை நகர இராமநாதபுர தி.மு. கழக உறுப்பினர்கட்கு

26—1—55 இரவு 10 மணிக்கு, கோவை நகர இராமநாதபுர தி. மு. கழகத்தின் உறுப்பினர் கூட்டம் தோழர் ஆர். கே. சடையப்பன் இல்லத்தில் நடைபெறும்.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் ஆலோசனைக் கூட்டம்

26—1—55 காலை 9 மணிக்கு, கோவை தியாகராயர் படிப்பகத்தில், தோழர்கள் மதுரை எஸ். முத்து, எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆகியோர் தலைமையில் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

* * *

பொதுக்கூட்டம்

26—1—55 மாலை 6½ மணிக்கு, இராமநாதபுரம் அன்னமார் மைதானத்தில், தோழர் பி. அய்யாசாமி தலைமையில் பொதுக்கூட்டம்நடைபெறும். தோழர்கள் ப. நாராயணன், இரா. சுந்தரம், பழனிசாமி ஆகியோர் பேசுவர்.

முத்தமிழ் விழா

26, 27, 28—1—55 ஆகிய நாட்களில், பெண்ணாகடம் கழக உயர்நிலைப் பள்ளியில் மாணவர் இலக்கிய மன்றச் சார்பில் தமிழ்த் திருநாளை முன்னிட்டு முத்தமிழ் விழா நடைபெறும். தோழர் சிவ. பழமலை விழாவை திறந்து வைப்பார்.

இயற்றமிழ் விழா: 26—1—55 மாலை 4 மணிக்கு, தோழர் பூவராகன் தலைமையில் 'தமிழும் தமிழரும்' என்பது பற்றி தோழர் டி. கோவிந்தராசன் பேசுவார்.

இசைத்தமிழ் விழா: 27-1-55 மாலை 4 மணிக்கு, தோழர் ரெ. கிருட்டினமூர்த்தி தலைமையில் 'தமிழ் வளம்' என்பது பற்றி தோழர் மு. கோவிந்தசாமி பேசுவார். தோழர்கள் கல்யாணசுந்தர தேசிகர், சிதம்பரம் இராமமூர்த்தி குழுவினரின் இசை விருந்து நடைபெறும்.

நாடகத்தமிழ் விழா: 28-1-55 மாலை 4 மணிக்கு, தோழர் கே. ஏ. அப்துல் கபூர் தலைமையில் 'இறந்த காலம்' என்பது பற்றி தோழர் சுரதா பேசுவார். இரவு 8 மணியளவில், மேற்படி பள்ளி மாணவர்களால் 'தமிழ்ச் செல்வம்' என்ற நாடகம் நடைபெறும்.

'பரப்பிரம்மம்'—நாடகம்

26—1—55 இரவு 9½ மணிக்கு, வேலூர் தோல் கிடங்கு ரோட், புதுத் தெருவில், தோழர் கந்தசாமி சுபேதார் தலைமையில், அண்ணா நாடக மன்றத்தாரால் 'பரப்பிரம்மம்' நாடகம் நடைபெறும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டு காலத்தில் சாகுபடிக்குத் திருத்திப் பண்படுத்தப்பட்ட நிலப் பிரதேசத்தின் விஸ்தீரணம் மொத்தம் 12 லட்சம் ஏகரா ஆகும்.

திரு-தமிழக விடுதலைப் போராட்டம்

வழக்குகள் பெங்களூருக்கு மாற்றம்

நாகர்கோவில், ஜன. 24—

தி. த. நா. கா. வழக்குகளை பெங்களூரில் விசாரணை செய்வதற்கு தலைமை உயர்நீதி மன்றம் உத்திரவிட்டதைத் தொடர்ந்து இவ்வழக்குகள் சம்பந்தமாகப் பல புதுப்புது சம்பவங்கள்கூட நிகழலாம் என்று நம்பப்படுகிறதாம்!

தி. த. நா. கா.-வைச் சேர்ந்த எம். எல். ஏ. க்களுக்காக உடனடியாக பெங்களூர் கோர்ட்டில் ஜாமீன் விடுதலை மனு தாக்கல் செய்யப்படலாமென்றும், அனேகமாக இந்த 25-ந் தேதிக்குள்ளாகவே அவர்கள் ஜாமீனில் விடுதலை பெற்று சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பெங்களூருக்கு இவ்வழக்குகள் மாற்றப்பட்டுவிட்டதால் அங்கு செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகளைக் கருதிக்கொண்டே, ஜாமீனில் விடுதலை பெற்ற பலரும் தங்கள் ஜாமீனை ரத்து செய்துவிட்டு போலீசில் ஆஜராகிவிடுவதையே விரும்புகின்றனராம்!

இந்த வழக்கில் எதிர்தரப்பு சாட்சிகளாக, திரு-கொச்சி முதன் மந்திரி பட்டம் தாணுவும், மாவட்டப் போலீஸ் அதிகாரியும், மற்றும் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களும், மாநில மாஜிஸ்திரேட்டுகளும், நீதிபதிகளும், மாவட்டக் கலெக்டர்களும் இருப்பார்கள் என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,